FIRST INFORMATION REPORT
முதல் தகவல் அறிக்கை
(Under Section 173 BNSS)

TAMIL NADU POLICE
INTEGRATED INVESTIGATION FORM-I

C 8318737

1. District : திருச்சி — PS: உறையூர் காவல் நிலையம் — Year: 2025 — FIR No.: 17/2025 — Date: 15.12.2025
   மாவட்டம் — காவல்நிலையம் — ஆண்டு — முத.அ. எண் — நாள்

2. (i) Act சட்டம்: Prevention of corruption — Sections பிரிவுகள்: 7
   (ii) Act சட்டம்: ACT 1988 (As amended in 2018) — Sections பிரிவுகள்:
   (iii) Act சட்டம்: — Sections பிரிவுகள்:
   (iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : — Date from : 09.12.2025 — Date to :
   குற்ற நிகழ்வு நாள் — நாள் முதல் — நாள் வரை
   Time Period : — Time from : — Time to : 16.30 hrs.
   நேர அளவு — நேரம் முதல் — நேரம் வரை
   (b) Information Received at PS. Date : 15.12.2025 — Time : 07.00 hrs
   காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் — நேரம்
   (c) General Diary Reference : Entry No(s) — Time :
   பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் — நேரம்

4. Type of Information : Written/ Oral / Electronic form : கணினியில் தட்டச்சு செய்யப்பட்டது.
   தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக / மின்னணு வடிவம்

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: தெற்கு 65 km தொலைவு
   குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும்
   Beat Number : — (b) Address : பட்டாச் சின்ன அலுவலகம், அலுவலகப்பட்டி தொண்டியம், திருச்சி மாவட்டம்
   முறைக் காவல் எண் — முகவரி

   (c) In case outside limit of this Police Station, then the Name of P.S : - — District : -
   இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் — மாவட்டம்

6. Complainant /Informant (a) Name : K. கிரியாமனா — (b) Father's/ Husband's Name : [illegible]
   குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் — தந்தை / கணவர் பெயர்
   (c) Date / Year of Birth : 02.06.1974 — (d) Nationality : இந்தியர் — (e) Passport No. : -
   நாள் / பிறந்த ஆண்டு — நாட்டினம் — வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்
   Date of Issue : - — Place of Issue : -
   வழங்கப்பட்ட நாள் — வழங்கப்பட்ட இடம்
   (f) Occupation : பட்டதாரி அதிகாரியர் — (g) Address : 1A1/5, ராஜிவ் நகர், மணப்பாறை, திருச்சி மாவட்டம்.
   தொழில் — முகவரி

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
   தெரிந்த / ஐயப்பாட்டிற்குறிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள்
   (தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)
   திரு. M. அன்பழகன், பட்டாச் சின்ன அலுவலர், திருச்சி URBAN, பட்டாச் சின்ன அலுவலகம், அலுவலகப்பட்டி தொண்டியம், திருச்சி மாவட்டம்,

8. Reasons for delay in reporting by the complainant / Informant:
   குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்

— வாய்ப்பில்லை —

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

—

10 Total value of properties stolen / involved : —
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு

11 Inquest Report / Un-natural death Case No. if any: —
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால்

12 FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

தனித்தாளில் இணைக்கப்பட்டுள்ளது.

13 Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed ..... Rank ..... to take up the Investigation / Refused Investigation / transferred to PS.....on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் ..... பதவி ..... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ..... காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

15.12.25

14 Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் /
பெருவிரல் இரேகைப் பதிவு

Signature of the Officer-in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

15 Date & Time of despatch to the court: 15.12.2025.
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்

Name: பெயர் F. அலெக்ஸ் ராஜ்
Rank: நிலை சார்பு ஆய்வாளர்,
அனைத்து மகளிர் காவல் நிலையம்
திருச்சி.

கனம் மாவட்ட முதன்மை மற்றும் அமர்வு நீதிபதி, திருச்சிராப்பள்ளி அவர்கள் முன்பாக பணிந்து சமர்பிக்கப்படுகிறது.

திருச்சி ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு குற்ற எண்.17/2025-இன் முதல் தகவல் அறிக்கையின் காலம் 12ன் தொடர்ச்சி.....

திருச்சி, ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புப்பிரிவு காவல் ஆய்வாளராகிய நான், இன்று 15.12.2025 பணியில் இருந்த போது காலை 07.00 மணியளவில் திருச்சி மாவட்டம், மணப்பாறை, 141/5, ராஜீவ் நகர் என்ற முகவரியில் வசித்து வரும் வினோத் என்பவரின் மனைவி திருமதி.K.சியாமளா என்பவர் திருச்சி, ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புப்பிரிவு அலுவலகத்தில் ஆஜராகி கொடுத்த புகார் மனுவை பெற்று, அது குறித்து சென்னை, ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை, இயக்குநரகத்திற்கு தெரிவித்து, அந்த புகார்மனு குறித்து முதல் கட்ட விசாரணை செய்து, புகார் மனுவில் கூறப்பட்டுள்ள திருச்சி, வையம்பட்டி, வட்டார கல்வி அலுவலகத்தில் BEO Incharge ஆக பணிபுரியும் திருமதி.லதாபேபி மற்றும் புகார்தாரர் திருமதி.K.சியாமளா ஆகியோர்களின் முன் நடத்தைகள் பற்றி இரகசிய விசாரணை செய்யப்பட்டது. இன்று 15.12.2025 காலை 08.00 மணிக்கு திருச்சி, ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு, குற்ற எண்.17/2025, சட்டப்பிரிவு 7 ஊழல் தடுப்பு சட்டம் 1988 (as amended in 2018)-ன்படி வழக்கு பதிவு செய்தேன். புகார்மனுவின் விபரம் பின்வருமாறு. 15.12.2025 அனுப்புநர் K.சியாமளா, வயது 40 க/பெ வினோத், 141/5, ராஜீவ் நகர், மணப்பாறை, திருச்சி மாவட்டம். பெறுநர் காவல் ஆய்வாளர், லஞ்ச ஒழிப்பு துறை, திருச்சி மாவட்டம். ஐயா, நான், மேற்கண்ட முகவரியில் வசித்து வருகிறேன். நான், மணப்பாறை ஒன்றியம், K.பெரியப்பட்டி, ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளியில் பட்டதாரி ஆசிரியராக பணிபுரிந்து வருகிறேன். இதற்கு முன்பு வையம்பட்டி ஒன்றியம், V.செட்டியப்பட்டி, ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளியில் 03.11.2014 முதல் பணிபுரிந்து, 28.07.2025 அன்று வையம்பட்டி ஒன்றியத்திலிருந்து, மணப்பாறை ஒன்றிய K.பெரியப்பட்டி, ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளிக்கு பணி மாறுதலில் வந்தேன். மேற்கண்ட V.செட்டியப்பட்டி, பள்ளியில் இருந்து நான் Relieve ஆன பின்பு LPC கொடுத்துவிட்டார்கள். வையம்பட்டி ஒன்றியத்தில் ஜூலை மாதத்திற்கான முழு சம்பளத்தினையும் கொடுத்துவிட்டார்கள். 28.07.2025 பணி மாறுதல் பெற்று வந்ததால் 28.07.2025 முதல் 31.07.2025 வரையிலான நான்கு நாட்களுக்குரிய ஊதியத்தினை வையம்பட்டி ஒன்றியத்தில் மீள செலுத்தும்படி மணப்பாறை ஒன்றியத்தில் என்னிடம் கூறியதன் பேரில் நான் வையம்பட்டி ஒன்றியத்திற்கு செலான் முலம் மணப்பாறை கருவூலத்தில் 19.08.2025 அன்று ரூ.13,729/-ஐ செலுத்திவிட்டேன். மேற்கண்ட 28.07.2025 முதல் 31.07.2025 வரையிலான நான்கு நாட்களுக்கான ஊதியத்தினை மணப்பாறை

ஒன்றியத்தில் இருந்து பெறுவது தொடர்பாக, மணப்பாறை ஒன்றிய அலுவலக BEO அவர்களிடம் கேட்டதற்கு, அவர் வையம்பட்டி BEO ஆபிசில் சென்று கொடுபடா NDC (Non Drawal Certificate) சான்று பெற்றுவரும்படி கூறினார். அதன்படி நான் 09.12.2025 அன்று மாலை சுமார் 4.30 மணியளவில் வையம்பட்டி ஒன்றிய BEO ஆபிசில், வையம்பட்டி ஒன்றிய BEO Incharge பணிபுரியும் திருமதி.லதாபேபி அவர்களை அவரது இருக்கையில் சந்தித்து ஜூலை மாதத்தின் கடைசி 4 தினங்களுக்குரிய ஊதியத்தினை தங்கள் அலுவலகத்திற்கு மணப்பாறை டிரஷரி மூலம் செலுத்திவிட்டேன் என்று தெரிவித்தேன். பின்னர், BEOவிடம் அதற்குரிய கொடுபடா சான்று உங்கள் அலுவலகத்தில் இருந்து வழங்கினால், மேற்கண்ட நான்கு நாட்களுக்கான ஊதியத்தினை மணப்பாறை BEO ஆபிசில் இருந்து Claim செய்ய முடியும் என்று கூறினேன், அதற்கு BEO லதாபேபி மேற்படி சர்டிபிகேட் கொடுக்க என்னிடம் ரூபாய் 1500 கேட்டார்கள், அதற்கு நான் BEOவிடம் மேடம் டிரஷரில பணம் கட்டனுமா மேடம் என்று கேட்டேன். அதற்கு BEO திருமதி.லதாபேபி டிரஷரிக்கெல்லாம் கிடையாது, அது எனக்கு நீங்க தனியா கொடுத்தீங்கன்னா மேற்படி சர்டிபிகேட் கிடைக்க ஏற்பாடு செய்வேன், இல்லைன்னா நீங்க அலஞ்சிக்கிட்டே இருக்க வேண்டியதுதான் என்று கூறினார். அதற்கு நான், மேடம் ஏதாவது குறைச்சிக்கோங்க, கொஞ்ச சிரமத்தில இருக்கேன் என்று கூறினேன். அதற்கு அவர் அதெல்லாம் எனக்கு தெரியாதுமா, நான் கேட்டத கொடுத்தா வேலை நடக்கும் இல்லையா அலைஞ்சிக்கிட்டே இருக்க வேண்டியததுதான் என்று கராராக கூறினார், இருந்தாலும் அப்போதைக்கு அவரிடம் சரியென்று சொல்லிவிட்டு வந்துவிட்டேன். எனக்கு லஞ்சம் கொடுக்க விருப்பமில்லை. மேலும், எனது சொந்த வேலையின் காரணமாக வெளியூர் சென்றுவிட்டதால் என்னால் உடனடியாக வர இயலவில்லை. ஆகையால், இன்று தங்களிடம் புகார் கொடுக்கிறேன். மேற்படி வையம்பட்டி ஒன்றியத்தில் இருந்து கொடுபடா சான்று கொடுப்பதற்கு என்னிடம் லஞ்சம் கேட்ட வையம்பட்டி Incharge BEO திருமதி.லதாபேபி மீது நடவடிக்கை எடுக்கும்படி கேட்டுக்கொள்கிறேன். இப்படிக்கு Sd.xxx (K.சியாமளா) 15/12/25 Submitted to the Hon'ble Principal District and Sessions Judge, Trichy. Received this report on 15.12.2025 at 07.00 hrs and registered a case in Trichy V&AC Cr.No.17/2025, u/s 7 of the PC Act-1988 (as amended in 2018) on 15.12.2025 at 08.00 hrs. Sd.xxx 15/12/25 Inspector of Police, V&AC, Trichy.

15/12/25
Insp. of Police
V&AC Trichy.